**துணை ஆணையர் (வவ), சரகம்-12 அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் - திரு. க. சந்திரசேகரன், எம்.காம்.,**
**இடம் - எண். 38/ 9, செட்டி தெரு, திருப்பெரும்புதூர் - 602 105**

**நக.1249 / 2016 /அ1**

**நாள் - 21.06.2017.**

பொருள் - பொதுப்பணிகள் - வணிக வரித் துறை - துணை ஆணையர் (வவ) அலுவலகம், சரகம்-12 - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி IV-ல் அடங்கிய 2013-2014 மற்றும் 2014-15-ம் ஆண்டிற்கான தட்டச்சர் பணி - முதல் கட்டம் - தெரிவாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணியில் உள்ளவர்களுக்கு - பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை -
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண் 967/ PSD-A/ 2016, நாள் - 03.02.2016.
2. இணை ஆணையர் (வவ) சென்னை (தெற்கு) கோட்டம், அவர்களின் நக.791/ 2016/அ2-VI, நாள் - 03.03.2016.
3. துணை ஆணையர்(வவ), சரகம் - 12 அவர்களின் செமுநக. 1249/ 2016/ அ1, நாள் 21.03.2016.
4. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், அவர்களின் ந.க.6447/ 2014 /அ2, நாள் 20.10.2015.

----------

**ஆணை -**

பார்வை 1-ல் காணும் கடித்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2013-2014 மற்றும் 2014-15-ஆம் ஆண்டுக்கான தொகுதி-IV தேர்வில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இணை ஆணையர்(வவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி இச்சரகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டனர். பார்வை 3-ல் காணும் துணை ஆணையர் (வவ), சரகம் - 12 அவர்களின் செயல்முறைகளின்படி கீழ்காணும் பட்டியலில் உள்ள தட்டச்சர்கள் அவர்களின் பெயர்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரி விதிப்பு வட்டங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

பார்வை 4ல் காணும் இணை ஆணையர்(வவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் கடிதத்தின்படி தற்பொழுது பணிபுரிந்து கொண்டிருக்கும் தகுதியுள்ள தட்டச்சர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என ஒப்புதல் வரப்பெற்றுள்ளது. எனவே, இச்சரகத்திற்கு உட்பட்ட அலுவலகங்களில் பணிபுரியும் கீழ்க்காணும் தட்டச்சர்களுக்கு தற்காலிக தெரிவு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில், தனியாளர்களின் பணி அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாளன்று பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble Court of Madras relating to Group IV Services 2013-2014 recruitment."

..2..

| வ.எண். | பணியாளரின் பெயர், பதவி, பணிபுரியும் அலுவலகம் திருவா. | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | D. ரம்யா, தட்டச்சர், உதவி ஆணையர்(வவ) அலுவலகம், திருப்பெரும்புதூர் வரி விதிப்பு வட்டம் | 28.03.2016 மு.ப. | 28.03.2016 மு.ப. |
| 2 | R. மோகனா, தட்டச்சர், உதவிஆணையர்(வவ)அலுவலகம், திருவள்ளூர் வரி விதிப்பு வட்டம் | 28.03.2016 மு.ப. | 28.03.2016 மு.ப. |
| 3 | P. சரிதா, தட்டச்சர், துணை ஆணையர்(வவ), சரகம்-12, (இ) திருப்பெரும்புதூர் | 30.03.2016 மு.ப. | 30.03.2016 மு.ப. |

தனியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகள் பணியாற்றுதலுக்குட்பட்டு, இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

தனியாளர்கள், தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி பெற வேண்டும்.

ஒம்/- க. சந்திரசேகரன்,
துணை ஆணையர் (வவ),
சரகம் - 12.

பெறுநர்

தனியாளர்கள்
(உரிய வழி மூலமாக)

நகல்-

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -3.
2. இணை ஆணையர்(வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை-6 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி ஆணையர்(வவ) அலுவலகம், திருப்பெரும்புதூர், திருவள்ளூர்.
4. பட்டியலுக்கு
5. பணிப்பதிவேடு
6. பணியமைப்புக் கோப்பு
7. உதிரி -1

//உண்மை நகல்//

21/06/2017
மேலாளர்/வ.வ.அ

21/6/17